KEMENTERIAN SUMBER MANUSIA

# "KERATAN AKHBAR KESUMA"

AHAD
7 Disember 2025

KEMENTERIAN SUMBER MANUSIA

| Akhbar | Makkal Osai |
| --- | --- |
| Tarikh | 5 December 2025 |
| Ruang | Nation |
| Muka Surat | 3 |

மக்கள் ஓசை

# வேலை காலி இடங்களை கட்டாயமாக அறிவிக்க வேண்டாம் எஸ்எம்இ நிறுவனங்களுக்கு விலக்கு

## சொக்சோ திட்டம்



கோலாலம்பூர், டிச. 7-

தொழிலாளர் காப்புறுதி முறை சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டிருப்பதைத் தொடர்ந்து இனி வேலை காலி இடங்களைக் கட்டாயமாக அறிவிக்க வேண்டிய அவசியத்தில் இருந்து சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கு (எஸ்எம்இ) விலக்களிப்பதற்கு சமூகப் பாதுகாப்பு நிறுவனம் (சொக்சோ) திட்டமிட்டுள்ளது என்று மனிதவள அமைச்சர் ஸ்டீவன் சிம் கூறினார்.

சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் நடத்தப்பட்ட தொடர் சந்திப்புகளுக்குப் பிறகு இந்த விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்ட அவர், இதன் தொடர்பான இறுதி முடிவு எடுப்பதற்கு முன்னதாக பெர்கேசோ, முதலாளிகள், தொழிலாளர்களின் ஒத்துழைப்பை நாடும் என்றார். ஆகக்கடைசியான வேலைச் சந்தை தகவல்களை மலேசியர்கள் பெற வேண்டும் என்பதை உறுதி செய்வதே இதன் இலக்காகும். வேலை காலி இடங்களை அறிவிக்கத் தவறும் நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கப்படமாட்டாது என்பதும் இப்புதிய திருத்தத்தின் கீழ் உறுதி செய்யப்படும் என்று நேற்று இங்கு வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில் அமைச்சர் தெரிவித்தார்.

| Akhbar | Makkal Osai |
|---|---|
| Tarikh | 5 December 2025 |
| Ruang | Nation |
| Muka Surat | 6 |







# முற்போக்கு ஊதிய கொள்கை நிரந்திர தீர்வா?

## மனிதவள அமைச்சு விளக்கமளிக்க வேண்டும்

### டத்தோ சிவநேசன் வலியுறுத்தல்

டில்லிராணி முத்து

பீடோர், டிச. 7-

முற்போக்கு ஊதிய கொள்கையால் தொழிலாளர் ஊதியம் உயர்ந்திருப்பதாக மக்களவையில் தெரிவித்த மனிதவள அமைச்சர் ஸ்டீபன் சிம் சீ கியோங்கின் தகவலை சுங்காய் சட்டமன்ற உறுப்பினரும் பேராக் மாநில சுகாதாரம், மனிதவளம், ஒற்றுமை, இந்தியர் நலத்துறை ஆட்சிக்குழு உறுப்பினருமான டத்தோ சிவநேசன் அச்சலிங்கம் வரவேற்றார்.

இருப்பினும் இத்திட்டம் நீண்டகால நகர்விற்கு தீர்வாகுமா என்பதை அமைச்சு ஆராய வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இத்திட்டம் புதிய ஊதிய கொள்கை அல்ல எனக் கூறிய டத்தோ சிவநேசன், இதற்கு முன்னரும் சில தனியார் துறைகளில் குறிப்பாக ஹோட்டல்கள், கனரக வாகனம் சார்ந்த தொழில்களிலும் இந்த ஊக்கத்தொகை வழங்கும் முறை நடைமுறையில் இருந்து வந்துள்ளதையும் அவர் நினைவுறுத்தினார்.

மேலும் இந்தப் புதிய ஊதிய கொள்கைக்காக அரசாங்கம் 50 மில்லியன் ரிங்கிட்டை ஒதுக்கியுள்ளது. ஒருவேளை அரசு இந்நிதியை ஒதுக்காவிட்டால், இத்திட்டத்தின் செயல்பாடு எவ்வாறு அமைந்திருக்கும் என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

அதோடு கூடுதல் ஊதியம், தொழிலாளர் வாழ்வாதாரம் சிறக்கும், பொருளாதார நிலையில் தொழிலாளர் மேம்பாடு போன்ற காரணங்களுக்காக இத்திட்டம் அமலாக்கம் செய்யப்பட்டாலும் வருங்காலத்தில் இத்திட்டத்தை முதலாளிகளே நடைமுறை படுத்துவார்கள்.

தங்களின் தொழிலாளர்களுக்கென அரசு எதிர்பார்க்கும் எண்ணம் கண்டிப்பாக நிறைவேறாது. மாறாக முதலாளிமார்கள் தங்களின் வருமானத்தைப் பெருக்க மட்டுமே இலக்கு கொண்டிருப்பார்களே தவிர தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்துவதில் இருக்காது எனவும் தொழிலாளர் வழக்கறிஞருமான டத்தோ சிவநேசன் தமது அனுபவத்தையும் பகிர்ந்தார்.

முன்னதாகக் கடந்த காலங்களில் சில துறைகளில் அமலில் இருந்த ஊக்க ஊதியமும் குறைந்த பட்ச ஊதியம் அமலுக்கு வந்த பின்னர் பங்கெடுக்கிறார்கள் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தொழிலாளர் சட்டம் 1955-த்தில்கூட வருடத்திற்கு தொழிலாளர் ஊதியத்தை உயர்த்தும் வரையறை இல்லை எனக் குறிப்பிட்ட டத்தோ சிவநேசன், முதலாளியும் தொழிற்சங்கமும் செய்து கொள்ளும் ஒப்பந்த பேச்சுவார்த்தை அடிப்படையில்தான் ஊதிய உயர்வு உட்பட பிற சலுகைகள் வழங்கப்படுகின்றன என்பதையும் கேள்விக்குறியாக மாறியது என்றும் அவர் இவ்வேளையில் சுட்டிக்காட்டினார்.

தற்போது அரசாங்கம் ஒதுக்கியுள்ள 50 மில்லியன் ரிங்கிட் நிதியுதவி இருக்கும் காரணத்தினால் மட்டும் தான், இத்திட்டத்தில் முதலாளிமார்கள் தொடர்ந்து தொழிற்சங்கவாதியுமான டத்தொ சிவநேசன் சுட்டிக்காட்டினார்.

மேலும் அந்த ஒப்பந்தம் மீறப்பட்டால் தொழிலியல் நீதிமன்றம் வாயிலாக தொழிலாளர்கள் அல்லது தொழிற்சங்கம் நன் தீர்வை பெற முடியும் என்பதையும் இவ்வேளையில் அவர் தெளிவுப்படுத்தினார்.

மக்களவையில் இதுவரை சுமார் 32,000 தொழிலாளர்களுக்கு இந்தப் புதிய ஊதிய கொள்கையின் அடிப்படையில் ஊதிய உயர்வு கிடைத்திருப்பதாகக் கூறியிருக்கும் மனிதவள அமைச்சர்

ஸ்டீவன் சிம் சீ கியோங்கின் கூற்றுக்கு, தொழிற்சங்கம், தொழிலாளர் வழக்கறிஞர், மனிதவள ஆட்சிக்குழு உறுப்பினர் என நீண்டகால அனுபவத்தைக் கொண்டிருக்கும் டத்தோ சிவநேசன் இத்திட்டத்திற்கான தூரநோக்கு செயல்பாடு என்னவென்பதையும் அதற்கான நிரந்திர சாத்தியம் என்னவென்பதையும் அமைச்சர் விளக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.முதலாளிமார்கள் நிரந்தரமாக தொழிலாளர்களுக்கு முற்போக்கு ஊதிய கொள்கையின் அடிப்படையில் ஊக்க ஊதியம் வழங்க வேண்டுமானால் அதனை தொழிலாளர் சட்டத்தின் கீழ் ஒரு சட்டமாக அமல்படுத்தி, அதனை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் எனவும் அது மட்டுமே தொழிலாளர்களின் ஊக்க ஊதியத்தை நிலைநிறுத்துமென்ற சாத்தியத்தையும் அவர் விவரித்தார்.

இந்நிலையில் ஸ்டீவன் சிம் இவ்விவகாரத்தில் நன்கு ஆராய்ந்து நுண்ணியல் திட்டங்களோடு சட்டமாக்கி நடைமுறைப்படுத்த ஆக்கப்பூர்வமான நடவடிக்கையில் இறங்க வேண்டும் எனவும் அவர் ஆலோசனை கூறினார்.

KEMENTERIAN SUMBER MANUSIA

| | |
|---|---|
| Akhbar | Tamil Nanban |
| Tarikh | 5 December 2025 |
| Ruang | Nation |
| Muka Surat | 4 |

# கட்டாய வேலை காலியிட அறிவிப்பு: எஸ்.எம்.இ. நிறுவனங்களுக்கு விலக்களிக்க சொக்சோ திட்டம்

கூறினார்.

திருத்தப்பட்ட விதிமுறைகள் அமல்படுத்தப்படுவதற்கு முன் ஈராண்டு கால அவகாசம் வழங்கப்படும் என குறிப்பிட்ட சிம், இந்த காலகட்டத்தின் போது வேலை காலியிடங்களை அறிவிக்க தவறினால் அபராதம் விதிக்கப்படாது என்று முதலாளிமாருக்கு உறுதியளித்தார்.



சந்தையில் காணப்படும் வேலைவாய்ப்புகளை மலேசியர்கள் அடைவதை உறுதி செய்வதும் நிறுவனங்கள் தங்களுடைய வேலை காலியிடங்களுக்கு ஏற்ற திறமையானவர்களை பெறுவதில் உதவவும் சிறந்த கொள்கைகளை வடிவமைக்கும் வகையில் நமது தொழிலாளர் சந்தையின் துல்லியமான தரவுகளை பெற்றிருப்பதும் இந்த முறைமையின் இலக்காகும் என்றார் அவர்.

அறிவிப்பு செய்யும் நடைமுறை மிக எளிமையானது. இந்த முறைமையை சம்பந்தப்பட்டவர்கள் நன்கு தெரிந்து கொள்வதில் வழிகாட்டவும் உதவவும் இந்த கால அவகாசம் பயன்படுத்தப்படும் என்று அவர் நேற்று முன்தினம் ஓர் அறிக்கையில் தெரிவித்தார்.

திருத்தப்பட்ட எஸ்.ஐ.பி. சட்டம் அனுகூலங்களை மேம்படுத்துகிறது. கூடுதல் வேலைவாய்ப்பு அலவன்சுகளை வழங்குகிறது. திறன் பயிற்சி உதவித் தொகை மற்றும் வேலையிழந்தவர்கள் இயங்குவதற்கான அலவன்சுகளுக்கு வகை செய்கிறது என்று அவர் மேலும் கூறினார்.

2025 ஆம் ஆண்டு எஸ்.ஐ.பி. (திருத்தம்) சட்ட மசோதா கடந்த வியாழக் கிழமை மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.